RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 174 | ஜூன்.30 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம்” : ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஜூன்.30-
"ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஒரே மாதத்திற்குள்ளேயே, தமிழகம் இன்றைக்கு அதலபாதாளத்திற்குப் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழில் நிறுவனங்கள் வேறு மாநிலங்களுக்குப் சென்று கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம். நாம் அதற்கு நூறு சதவீதம் தயாராக இருக்க வேண்டும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை, வானகரத்தில் மு.க. ஸ்டாலின் முன்னிலையில், முன்னாள் அமைச்சர் பென்ஜமின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாற்றுக் கட்சியினர் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களைத் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம்: எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து, பவள விழா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். எம்.ஜி.ஆர். இருந்த கழகத்திற்கு வந்திருக்கிறீர்கள். அதுமட்டுமா, அவர் பொருளாளராக இருந்து செயல்பட்ட இயக்கத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டுத்தான் அவர் முதன்முதலில் சட்டப்பேரவை உறுப்பினராக வெற்றி பெற்றார்.

தனிக்கட்சி கண்ட பிறகும், கருணாநிதியை சட்டப்பேரவையில் ஒருவர் பேரைக் குறிப்பிட்டுப் பேசியபோது, அன்றைக்கு சட்டப்பேரவையில் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர், அதைக் கண்டித்தார். என்ன சொல்லிக் கண்டித்தார் தெரியுமா, “உங்களுக்கு நான் தலைவராக இருக்கலாம்; ஆனால் எனக்குத் தலைவர் கலைஞர்தான்” என்று சொல்லி, அந்த வார்த்தையை வாபஸ் வாங்கச் சொன்னார். இது வரலாறு.

முன்னாள் அமைச்சர் பென்ஜமின் அ.தி.மு.க.வில் இணைந்து பல ஆண்டுகள் உண்மையாக உழைத்தவர். வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளராக, சென்னை 145ஆவது வார்டின் மாமன்ற உறுப்பினராக, மாநகராட்சியின் துணை மேயராகப் படிப்படியாக உயர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் அறிமுகமானவர். 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் மதுரவாயல் தொகுதியில் வென்று, ஊரகத் தொழில் துறை அமைச்சராக செயல்பட்டிருக்கிறார்.

அவர் அமைச்சராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தேன். நாங்கள் கேள்விகள் கேட்கிற நேரத்தில், பல அமைச்சர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பென்ஜமின் பதில் சொல்கிறார் என்று சொன்னால், நாங்கள் கொஞ்சம் உஷாராக இருப்போம். ஏன் என்றால், புள்ளி விவரத்தோடு, ஆதாரங்களோடு எதையும் ஆணித்தரமாக அழுத்தமாக



எடுத்துச் சொல்லக் கூடியவர். அந்த இளைஞர் சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்து பதில் சொல்வதை நாங்கள் ரசித்ததுண்டு.

பொதுவாக, ஒரு தேர்தல் முடிந்தவுடன், வெற்றி பெற்ற இயக்கத்தை நோக்கி நிறைய பேர் சேர்வார்கள். எதிர்க்கட்சியில் இருந்து விலகி, ஆளுங்கட்சிக்குத்தான் நிறைய பேர் சென்று சேர்வார்கள். ஆனால் இங்கு என்ன என்றால், எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் பதவிக்காக அல்ல; பவுசுக்காக அல்ல; பொறுப்புக்காக அல்ல; நீங்கள் எல்லாம் "கொள்கைதான் முக்கியம்" என்ற உணர்வோடு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதுதான் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம். உண்மையிலேயே பெருமைப்பட வேண்டிய விஷயம்.

திராவிட முன்னேற்றக் கழகம் வலிமையாக இருந்தால்தான், தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று நம்பி இந்த இயக்கத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக, எந்தத் துறையை எடுத்தாலும், இதுவரை தமிழ்நாடு கண்டிராத வளர்ச்சியை, நம்முடைய தமிழ்நாடு பார்த்தது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாட்டை நாம் உயர்த்தினோம். 'தினமும் ஒரு திட்டம்' என்று சொல்லத்தக்க வகையில் திட்டங்களை உருவாக்கினோம். அனைத்துத் தரப்பு மக்களையும் நாம் கவரும் வகையில் திட்டங்கள் தீட்டினோம். திட்டங்கள் மக்களிடம் சென்று சேர்ந்தன.

நமது ஆட்சியின் மீது இருந்த நம்பிக்கையால்தான், தமிழ்நாட்டை நோக்கிப் பல்வேறு மாநிலங்களிலிருந்து, பல்வேறு நாடுகளிலிருந்து உலக அளவில் மிகப்பெரிய நிறுவனங்கள் எல்லாம் வந்தன; தொழில் தொடங்கினார்கள். அதுமட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்புகள் பெருகின. அண்டை மாநிலங்களில் ஆட்சி செய்யும், அரசியல் ரீதியாக நமக்கு எதிரணியில் இருக்கும் தலைவர்கள் கூட இதனை வெளிப்படையாகப் பாராட்டினார்கள்; சில பேர் பொறாமைப் பட்டார்கள்.

ஆனால், இப்போது ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது. ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஒரே மாதத்திற்குள், தமிழ்நாடு இன்றைக்கு அதலபாதாளத்திற்குப் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழில் நிறுவனங்களை நடத்துவோர் இந்த புதிய ஆட்சியை நம்பித் தமிழ்நாட்டுக்கு வர பயப்படுகிறார்கள், தயங்குகிறார்கள்; அதனால், வேறு மாநிலங்களுக்குப் சென்று கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம், சட்டம் ஒழுங்கைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பாலியல் கொடுமைகள், போதை மருந்து நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சு, அரிவாள் வெட்டுகள், கொள்ளைகள் மற்றும் அராஜகங்கள். டி.வி.யை பார்த்தாலே, பேப்பரைப் படித்தாலே இந்தச் செய்திகள்தான் நம் கண்களில் படுகின்றன. அதிலும் குறிப்பாக, நிறைய குற்றங்களில் ஆளுங்கட்சிக்காரர்களே சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். இதுதான் வேதனை.

இன்னொரு பக்கத்தில், மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம் எனப் பல்வேறு பிரச்சினைகள். ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படாமல், “டேக் டைவர்ஷன்” என்று திசைதிருப்பும் வேலைகளில்தான் இந்த ஆட்சியாளர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய இந்த டெக்னிக் மக்களுக்கு இப்போது புரிய ஆரம்பித்துவிட்டது. இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். தவறு செய்துவிட்டோம். வாக்களித்தவர்களும் கஷ்டப்படுகிறார்கள்; வாக்களிக்காதவர்களும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களே தன்னெழுச்சியாகப் பல இடங்களில் இப்போது போராட ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு அமைச்சர்கள் எங்காவது காரில் நிகழ்ச்சிக்குச் செல்லும்போது, வழிமறித்துக் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்தச் சூழலில், மக்களுக்குத் துணையாக நாம்தான் இருக்க வேண்டும். தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பும் கடமையும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் அதிகமாக இருக்கிறது. ஏன் என்றால், நாம் பார்த்துப் பார்த்து வளர்த்த தமிழ்நாட்டை, சீரழிய விடக் கூடாது.

ஒரு தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழப்பது என்பது, ஏதோ பெரிய வீழ்ச்சி அல்ல. எத்தனையோ வெற்றியைப் பார்த்திருக்கிறோம்; எத்தனையோ தோல்வியையும் பார்த்திருக்கிறோம். தி.மு.க.வைப் போன்று, வெற்றி பெற்ற கட்சியும் கிடையாது; தோல்வி அடைந்த கட்சியும் கிடையாது.

தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம்; விரைவில் வரலாம்; மூன்று மாதங்கள் கழித்து வரலாம்; ஆறு மாதங்கள் கழித்து வரலாம்; ஏன் என்றால், இப்போது நடைபெறும் ஆட்சி என்பது, மெஜாரிட்டியோடு அவர்கள் வெற்றி பெறவில்லை. மெஜாரிட்டி என்றால் என்ன? 118ஆவது வர வேண்டும். அவர்கள் வெற்றி பெற்றது 108 தான். தி.மு.க.தான் வெற்றி பெற வேண்டும்; ஸ்டாலின்தான் முதல்வராக வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்தீர்கள் அல்லவா... நம்முடன் இருந்த அந்தக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவில்தான் இன்றைக்கு இந்த வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

அவ்வாறு ஓடும் வண்டி, எங்கே சென்று நிற்கப் போகிறது என்று தெரியவில்லை. ஆனால், எப்போது எது நடந்தாலும் நாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம்; எந்தச் சூழ்நிலையிலும் வரலாம். நாம் அதற்கு நூறு சதவீதம் தயாராக இருக்க வேண்டும்.

எனவே, கழகத்தின் வெற்றிக்கு இந்த நிமிடத்திலிருந்தே உழைக்கத் தொடங்குவோம், பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்ற உறுதி எடுக்கும் நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியை நாம் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். உண்மையாக உழையுங்கள்; உங்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் உங்களைத் தேடி வரும். எனத் தெரிவித்தார்.

## “தவெகவின் வாஷிங் மெஷின் அரசியல்...” : உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்

சென்னை: ஜூன்.30-
“‘தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்’ என்று ஸ்கிரிப்ட் படி பொங்கிய முதல்வர், அடுத்த சீனில், சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்?” என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், “மற்றொரு நாள். மற்றுமொரு ராஜினாமா. இந்த சோஃபா மாடல் ஆட்சி அமைந்த பிறகு, அதிமுகவின் எம்.ஆர். விஜயபாஸ்கர் 6ஆவது எம்எல்ஏவாக இன்று பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.



ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல் எந்த அளவுக்கு தீவிரம் ஆகியுள்ளது என்பதையே இது காட்டுகிறது. ஆட்சி அமைக்க ஆதரவு அளித்த கட்சிகளின் மீது நம்பிக்கையின்றி, நிறுத்தாமல் எம்எல்ஏக்கள் பர்ச்சேஸை தொடருவது, மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம்.

‘தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்’ என்று ஸ்கிரிப்ட் படி பொங்கிய முதல்வர், அடுத்த சீனில், சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்? சோஃபா மாடல் அரசின் இந்த வாஷிங் மெஷின் அரசியலை தமிழ்நாடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்தார் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர்

சென்னை, ஜூன்.30-
கரூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ எம்.ஆர். விஜயபாஸ்கர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கரூர் தொகுதி அதிமுக எம்எல்ஏவாக உள்ள முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சந்தித்து எம்.ஆர்.விஜயபாஸ்கர் தனது ராஜினாமா கடிதத்தை அளித்தார். அவரின் ராஜினாமா கடிதத்தை ஏற்பதாக சபாநாயகர் உடனடியாக



அறிவித்துள்ளார்.

சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய 25 எம்எல்ஏக்களில் எம்.ஆர். விஜயபாஸ்கரும் ஒருவர்.

சில நாட்களுக்கு முன்பு அப்போது இவர்களின் கட்சிப் பொறுப்புகளை பழனிசாமி பறித்தார். மீண்டும் அவர்கள் பழனிசாமியுடன் சமாதானம் ஆன பின்னரும், கட்சிப் பதவி வழங்கப்படவில்லை.

எம்.ஆர்.விஜயபாஸ்கரை அதிமுகவின் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக நியமித்தார் பழனிசாமி. ஆனாலும், கரூர் மாவட்டச் செயலாளர் பதவி எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக கடும் அதிருப்தியில் இருந்த அவர், இன்று தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஏற்கெனவே மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி.விஜயபாஸ்கர் ஆகிய 5 அதிமுக எம்எல்ஏக்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். இப்போது 6வது எம்எல்வாக எம்.ஆர்.விஜயபாஸ்கரும் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

## ஆஸி.யில் ஸ்கை டைவிங் 18,000 அடி உயரத்தில் இருந்து பேரனுடன் குதித்தார் 80 வயது இந்திய தாத்தா

கான்பெரா, ஜூன்.30-
இந்தியாவைச் சேர்ந்த 80 வயது முதியவர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஸ்கை டைவிங்கில், தனது பேரனுடன் 18,000 அடி உயரத்தில் இருந்து குதித்த வீடியோ சமூக ஊடகத்தில் வைரலானது.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர் அங்கித். இவருக்கு ஸ்கை டைவிங்கில் அதிக ஆர்வம். ஆஸ்திரேலியாவில் வசிக்கும் அங்கித் தனது தாத்தாவுடன் ஏற்கெனவே 15,000 அடி உயரத்தில் இருந்து குதித்துள்ளார். இந்நிலையில் இருவரும் 18,000 அடி உயரத்தில் இருந்து குதிக்க முடிவு செய்தனர்.

விமானத்தில் ஏறும்முன் அங்கித் தனது 80 வயது தாத்தாவிடம், பயப்பட வேண்டாம் என கூறியுள்ளார். அதற்கு தாத்தா ‘யார் பயந்தது என கூறி விமானத்தில் இருந்து பேரன் அங்கித்துடன் குதித்து பாராசூட் மூலம் பறந்து வந்து வெற்றிகரமாக தரையிறங்கினார்.

இந்திய தேசிய கொடியுடன் தரையிறங்கிய தாத்தா ‘ஜெய் ஹிந்த்! ஜெய் பாரத்! ஜெய் ஹரியானா! என தேசபக்தியுடன் உற்சாகமாக குரல் கொடுத்தார். இந்த வீடியோவை அங்கித் சமூக ஊடகத்தில் பகிர்ந்தார். இந்த வீடியோ வைரலாக பரவி வருகிறது.

## காதலனுடன் சேர்ந்து வருங்கால கணவரை கொன்றது எப்படி? : போலீஸாரிடம் நடித்துக் காட்டிய சியா கோயல்

புனே, ஜூன்.30-
மகாராஷ்டிர மாநிலம் புனே நகரைச் சேர்ந்த பிரபல ரியல் எஸ்டேட் தொழிலதிபர் கேத்தன் அகர்வால் (26). இவருக்கும் சியா கோயல் (20) என்ற இளம் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆனால், தனது காதலன் சேத்தன் சவுத்ரியுடன் சேர்ந்து கடந்த ஜூன் 18ம் தேதி லோஹாகாட் கோட்டை மலை உச்சியிலிருந்து கேத்தனை கீழே தள்ளிப் படுகொலை செய்தார்.

இதுகுறித்து புனே ஊரகக் காவல் கண்காணிப்பாளர் சந்தீப் சிங்கில் கூறியதாவது: "சியா கோயல் மற்றும் சேத்தன் சவுத்ரி ஆகிய இருவரையும் லோஹாகாட் கோட்டையில் கொலை நடந்த இடத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினோம். அவர்கள் எந்தப் பாதை வழியாகக் கோட்டைக்கு வந்தனர், சம்பவத்தன்று எந்தெந்த இடங்களில் நின்று கொண்டிருந்தனர், கேத்தனை எவ்வாறு கீழே தள்ளினர் என்பது போன்ற அனைத்து நிகழ்வுகளும் அச்சு அசலாக அவர்கள் நடித்துக் காட்டினர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த மறு உருவாக்க நடவடிக்கையின் போது லோஹாகாட் கோட்டைக்கு பொது மக்களின் வருகை தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இந்த ஒட்டுமொத்த விசாரணையும் முழுமையாக வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சந்தீப் சிங் கில் கூறினார்.

காவல்துறை வட்டாரங்கள் கூறுகையில், “கோட்டையில் கேத்தனுடன் சியா கோயல் சென்ற போது, பின் தொடர்ந்த காதலன் சேத்தனுக்கு சியா ஏதோ ஒரு ரகசிய சிக்னல் கொடுத்துள்ளார். அதன் பிறகே இருவரும் சேர்ந்து கேத்தனைத் மலை உச்சியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்துள்ளனர். சேத்தன் சவுத்ரி கோட்டைக்கு நுழைவுக் கட்டணம் ஏதுமின்றி ரகசியமாக நுழைந்துள்ளார்” என்று தெரிவித்தன.





# முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலதிட்ட உதவி வழங்கும் விழா

அனகாபுத்தூர், ஜூன்.30-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூரில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட இளைஞரணி தலைமை தமிழக வெற்றிகழகம் சார்பில் கழக தலைவர், தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழா மாவட்ட இளைஞரணி சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் குமார், பல்லாவரம் தொகுதி சட்டமன்ற காமாட்சி ஜெயகிருஷ்ணன், மாவட்ட கழக துனை செயலாளர் சுனிதா ரமேஷ், இணை செயலாளர் மதன், பொருளாளர் தம்பிராஜா, பரங்கிமலை ஒன்றிய கழக செயலாளர் சங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதனை தொடர்ந்து ஏழை எளிய மக்கள் 500க்கும் மேற்பட்டோருக்கு நலதிட்ட உதவிகளான அரிசி, பிளாஸ்டிக் பக்கெட், குடைகள் வழ்ங்கப்பட்டது. இதில் அனகாபுத்தூர், பம்மல், பல்லாவரம், பொழிச்சலூர் பகுதி நிர்வாகிகள், வார்டு மற்றும் தொண்டரணி நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ராமர் கோயில் காணிக்கை திருட்டு விவகாரம்: அவசர விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் மறுப்பு



புது டெல்லி, ஜூன்.30-

அயோத்தி ராமர் கோயிலுக்கு வழங்கப்பட்ட காணிக்கைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து சிபிஐ விசாரணை கோரும் மனுக்களை அவசரமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. இவ்விவகாரத்தை இன்னும் சில நாட்கள் கழித்து விசாரித்தாலும் "வானம் இடிந்து விழுந்துவிடாது" என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

வழக்கின் அவசரத் தன்மை குறித்து நீதிமன்றப் பதிவகம் மற்றும் உரிய அதிகாரி ஆகியோர் திருப்தி அடைந்த பிறகு, உரிய நேரத்தில் இந்த மனுக்கள் விசாரணைக்குப் பட்டியலிடப்படலாம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ் மற்றும் ஷீல் நாகு அடங்கிய அமர்வு கூறியது.மனுதாரர்களில் ஒருவரான அஜய் குமார் ராய் நேரில் ஆஜராகி, விரைவான விசாரணைக்கு வலியுறுத்தியதுடன், முறைகேடு புகார்கள் மீதான தற்போதைய விசாரணையில் திருப்தியில்லை என தெரிவித்தார். இந்த விவகாரத்தில், உத்தரப் பிரதேச மாநிலத்தின் சார்பில் மூத்த கூடுதல் தலைமை வழக்கறிஞரும், மூத்த வழக்கறிஞருமான சரண் தேவ் சிங் தாக்கூர் ஆஜரானார்.

பின்னணி என்ன?

உத்தர பிரதேசத்திலுள்ள அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளைக்குப் பக்தர்கள் அளித்த காணிக்கையில் ரூ.7 கோடிக்கும் அதிகமான பணத்தை அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் கையாடல் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.இந்நிலையில் அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் மற்றும் அறங்காவலர் அனில் மிஸ்ரா ஆகியோர் தங்களது பதவிகளை அண்மையில் ராஜினாமா செய்தனர். கோயிலுக்கு வந்த நன்கொடை நிதியில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, குற்றத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று இந்த ராஜினாமாவை அளித்துள்ளனர். இதுதொடர்பாக கோயிலில் பணத்தை எண்ணும் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மத்திய பிரதேசத்தில் சம்பளம் கேட்ட நடிகருக்கு மிரட்டல்: தயாரிப்பாளர் தரப்பில் மவுனம்



மும்பை, 30-

திரைப்படப் படப்பிடிப்பில் சம்பளம் தராமல் மிரட்டப்பட்டதாகக் கூறிய நடிகர் பாதுகாப்பாக மும்பை வந்தடைந்தார். மத்தியப் பிரதேச மாநிலம் மைஹார் பகுதிக்கு படப்பிடிப்பிற்காக 'லாபடா லேடிஸ்' திரைப்படத்தில் நடித்து புகழ்பெற்ற நடிகர் சத்யேந்திர சோனி சென்றிருந்தார். அங்கு 8 நாட்கள் அவர் பணியாற்றிய நிலையில், அதற்கான ஊதியத்தை வழங்கத் தயாரிப்பாளர் தரப்பு மறுத்துவிட்டதாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், 'என்னுடைய உழைப்பிற்கான பணத்தைக் கேட்டபோது மிரட்டல் விடுத்தனர்' என்று வேதனையுடன் கூறியிருந்தார்.

அந்த வீடியோவிற்குப் பிறகு அவர் சமூக வலைதளத்தில் எந்தப் பதிவும் வெளியிடாததால், அவருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்று ரசிகர்கள் அச்சமடைந்தனர். இந்நிலையில், மிரட்டலுக்கு உள்ளான சத்யேந்திர சோனி நேற்று நண்பர்கள் ஸ்ரீதர் துபே மற்றும் பங்கஜ் சர்மா ஆகியோருடன் பாதுகாப்பாக மும்பை வந்தடைந்தார். அவர் நலமுடன் வீடு திரும்பியது ரசிகர்களுக்கு நிம்மதியைத் தந்துள்ள போதிலும், அவர் கூறிய புகார்கள் குறித்து இதுவரை தயாரிப்பாளர் தரப்பிலிருந்தோ அல்லது அதிகாரப்பூர்வ அமைப்புகளிடமிருந்தோ எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

போலீசார் இந்த விவகாரத்தில் இன்னும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதையும் வெளியிடவில்லை. திரையுலகில் சம்பள பாக்கி மற்றும் மிரட்டல் புகார் தொடர்பான இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# தாராபுரத்தில் தி.மு.க. மாணவர் அணி ஆர்ப்பாட்டம்: முன்னாள் அமைச்சர்கள் சாமிநாதன், மற்றும் கயல்விழி உட்பட 300 பேர் கைது!




தாராபுரம், ஜூன்.30-

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் தி.மு.க. மாணவர் அணி சார்பில், தமிழக அமைச்சர் சரத்குமார் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போன்ற வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானதாகக் கூறப்படும் விவகாரத்தை கண்டித்தும், அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசை கண்டித்தும், அண்ணா சிலை முன்பு திங்கள்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.க. நிர்வாகிகள் தலைமை தாங்கினர். இதில் முன்னாள் அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி, தி.மு.க. திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல. பத்மநாபன், தாராபுரம் நகரச் செயலாளர் முருகானந்தம், ஒன்றிய செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார், நகர்மன்றத் தலைவர் பாப்பு கண்ணன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் 300க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும்", "தமிழக அரசு இதுகுறித்து விளக்கம் அளிக்க வேண்டும்" என்று முழக்கங்களை எழுப்பி, அரசுக்கு எதிராக கடும் கண்டனங்களை தெரிவித்தனர். இதனால் அண்ணா சிலை பகுதி முழுவதும் பரபரப்பான சூழல் நிலவியது.போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, தாராபுரம் காவல் துணைக் கண்காணிப்பாளர் சிவகுமார் தலைமையிலும், காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் மேற்பார்வையிலும், நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். பின்னர், அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி, ஐக் முன்னாள் அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளையும், போராட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க.வினரையும் போலீசார் குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று காவல் துறை வாகனங்களில் ஏற்றினர். அவர்களை தாராபுரம் புறவழிச்சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தற்காலிகமாக தங்க வைத்து காவலில் வைத்தனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், தாராபுரம் முழுவதும் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

# "தவெகவின் வாஷிங் மெஷின் அரசியல்..." உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்



சென்னை, ஜூன்.30-

"'தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்' என்று ஸ்கிரிப்ட் படி பொங்கிய முதல்வர், அடுத்த சீனில், சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்?" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், "மற்றொரு நாள். மற்றுமொரு ராஜினாமா. இந்த சோஃபா மாடல் ஆட்சி அமைந்த பிறகு, அதிமுகவின் எம்.ஆர். விஜயபாஸ்கர் 6ஆவது எம்எல்ஏவாக இன்று பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல் எந்த அளவுக்கு தீவிரம் ஆகியுள்ளது என்பதையே இது காட்டுகிறது. ஆட்சி அமைக்க ஆதரவு அளித்த கட்சிகளின் மீது நம்பிக்கையின்றி, நிறுத்தாமல் எம்எல்ஏக்கள் பர்ச்சேஸை தொடருவது, மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம்.

'தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்' என்று ஸ்கிரிப்ட் படி பொங்கிய முதல்வர், அடுத்த சீனில், சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்? சோஃபா மாடல் அரசின் இந்த வாஷிங் மெஷின் அரசியலை தமிழ்நாடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூன்.30-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .K.S.பிரவீன் கௌதம், அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ்பார்க் அருகில் அமைந்துள்ள திருமுகு சிவன் கோயில் திருவிழாவில் நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே. எம். ராஜூ கலந்து கொண்டார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே. போஜன், குன்னூர் ஒன்றிய கழகச் செயலாளர் பிரேம்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் காளிதாசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தீனதயாளன் மற்றும் கழக நிர்வாகிகள் பிரதீப், மனோகரன், மகாலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மாணவிகளுக்கு பாலியல் தொல்லை; தலைமையாசிரியர் கைது

## பள்ளிக்கு பூட்டு போட்டு பெற்றோர் முற்றுகை

மால்டா, ஜூன்.30-

மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டம் ஹபிப்பூர் போலீஸ் எல்லைக்குட்பட்ட காந்துர்கா பகுதியில் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் படிக்கும் மாணவி ஒருவர், பள்ளியில் மற்ற ஆசிரியர்கள் இல்லாத நேரத்தில் தலைமையாசிரியர் தன்னிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக தனது குடும்பத்தினரிடம் கூறி அழுதுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த மாணவியின் பெற்றோர், மற்ற மாணவர்களின் பெற்றோர்களிடம் இது குறித்து பேசியபோது, பல மாணவிகளுக்கும் இதே போன்ற கசப்பான அனுபவம் அந்த தலைமையாசிரியரால் ஏற்கனவே ஏற்பட்டது தெரியவந்தது. பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் நேற்று முன்தினம் திரண்டு வந்து சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரை முற்றுகையிட்டு கேள்வி எழுப்பினர்.

அப்போது அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்ததால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், அவரை பள்ளி அறைக்குள் வைத்து பூட்டி சிறைவைத்தனர். தகவல் அறிந்து வந்த போலீசார், தலைமையாசிரியரை மீட்டு விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இந்த விவகாரம் குறித்து ஹபிப்பூர் தொகுதி எம்.எல்.ஏ., ஜோயல் முர்மு (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்), போலீஸ் நிலையத்திற்கு நேரில் சென்று விரிவான விசாரணை நடத்த உத்தரவிட்டார்

# வெனிசுலா: இடிபாடுகளில் இருந்து 96 மணி நேரத்துக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்ட தந்தை, மகன்

கராகஸ், ஜூன்.30-

வெனிசுலா நாட்டில் கடந்த வாரம் அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 1,500 ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில், அங்கு இடிபாடுகளில் இருந்து 96 மணி நேரத்துக்கு பின் தந்தையும், மகனும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இது மீட்பு பணியில் சற்று நம்பிக்கை தந்துள்ளது.

தென் அமெரிக்க கண்டத்தில் வெனிசுலா அமைந்துள்ளது. அந்த நாட்டின் யாராகுய் மாகாணம், சான்பெலிப் நகரில் கடந்த புதன்கிழமை மாலை 6 மணி அளவில் (இந்திய நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை 3.35 மணி) சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.2 ஆகப் பதிவானது.

அடுத்த 40 விநாடிகளில் யுமரே நகரில் 2வது மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.5 ஆகப் பதிவானது. முதல் பூகம்பம் ஏற்பட்ட சான் பெலிப் நகரில் இருந்து 16 கி.மீ. தொலைவில் யுமரே நகர் அமைந்துள்ளது. பூகம்பம் காரணமாக அந்த நாட்டில் பல்வேறு நகரங்களில் உள்ள மக்களின் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டிடங்கள் சேதமடைந்தன. இதன் இடிபாடுகளில் சிக்கி சுமார் 1,500 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பூகம்பம் ஏற்பட்டு நான்கு நாட்கள் கடந்த நிலையில் அங்கு மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் ஈடுபட்டு வருகின்றன.இந்நிலையில், வெனிசுலாவின் லா குய்ரா நகரில் பூகம்பம் ஏற்பட்ட சுமார் 96 மணி நேரத்துக்கு பிறகு இடிபாடுகளில் சிக்கி இருந்த தந்தை மற்றும் மகன் மீட்கப்பட்டுள்ளனர். இந்த பணியை பிரான்ஸ் மற்றும் அமெரிக்க மீட்பு படையினர் மேற்கொண்டனர். இடிபாடுகளுக்குள் யாரேனும் உயிரோடு இருக்கிறார்களா என்பதை கண்டறிய பிரத்யேக கேமரா மற்றும் சிறப்பு கருவிகளை அவர்கள் பயன்படுத்தினர். அதன் மூலமாகவே மீட்கப்பட்ட தந்தை, மகனை அவர்கள் கண்டறிந்தனர். இடிபாடுகளில் சிக்கி இருந்த அவர்களை சுமார் 12 மணி நேர போராட்டத்துக்கு பிறகு மீட்பு படையினர் மீட்டுள்ளனர். அவர்கள் இருவரும் நீர்ச்சத்தை இழந்த காரணத்தால் கடும் சோர்வாக காணப்பட்டனர். அவர்கள் இருவரும் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல். இதற்கு முன்பு இடிபாடுகளில் இருந்து தாய் மற்றும் 9 மாத குழந்தையை மீட்பு படையினர் அங்கு மீட்டிருந்தனர்.



## 20 ஆண்டு, 10 ஆண்டு சிறப்புப் பணிக்கான ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை, தேர்வுநிலை ஆணைகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, ஜூன்.30-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில், நீண்டகாலமாக சிறப்பாக பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை மற்றும் தேர்வுநிலை ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில், 2006 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 20 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை ஆணைகளும், 2016 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 10 ஆண்டுகள் நிறைவு செய்து சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை ஆணைகளும் மாவட்ட கல்வி அலுவலர் தொடக்கக் கல்வி சௌந்தர் ராசன் அவர்களால் வழங்கப்பட்டன. காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில் பணியாற்றும் மொத்தம் 95 ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை மற்றும் தேர்வுநிலை ஆணைகள் வழங்கப்பட்டன. இந்த ஆணைகள் ஆசிரியர்களின் நீண்டகால அர்ப்பணிப்பு, திறமையான பணிச் சேவை மற்றும் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய பங்களிப்புக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாக அமைந்தது.

இந்நிகழ்வில் வட்டார கல்வி அலுவலர்கள் வெங்கடேசன், பெலிசிட்டா மேரி, தாசூன் உள்ளிட்ட வட்டாரக் கல்வி அலுவலக அதிகாரிகள், கல்வித் துறை அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு, ஆணைகள் பெற்ற ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். அரசு ஆசிரியர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்த நடவடிக்கை, ஆசிரியர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## பொழிச்சலூரில் தமிழக வெற்றி கழகம் சார்பில் நலதிட்ட உதவி வழங்கி ஏழை, எளிய மக்களுக்கு அசைவ விருந்து வழங்கங்கும் விழா நடைபெற்றது

பொழிச்சலூர். ஜூன்.30-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பொழிச்சலூரில் தமிழக வெற்றிகழகம் சார்பில் கழக தலைவர் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு நலதிட்ட உதவி மற்றும் அசைவ விருந்து வழங்கு விழா த.வெ.க பிரமுகர் இராமகிருஷ்ணன் என்ற அருண் தலைமையில் 1வது வார்டு விநாயகா நகர் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல்குமார், பல்லாவரம் தொகுதி சட்டமன்ற



உறுப்பினர் காமாட்சி ஜெயகிருஷ்ணன், த.வெ.க நிர்வாகி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு நலதிட்ட உதவியான 200 மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், மகளிர் 300 பேருக்கு சேலைகளும் வழங்கி ஏழை எளிய மக்கள் 500 பேருக்கு அசைவ விருந்து வழங்கினர். இந்நிகழ்ச்சியில்

பரங்கிமலை ஒன்றிய கழகச் செயலாளர் சங்கர், பொழிச்சலூர் ஊராட்சி மேற்குப் பகுதி செயலாளர் ரவி, இணைச் செயலாளர் ஜான், பொழிச்சலூர் ஊராட்சி கிழக்கு பகுதி செயலாளர் மணிகண்டன், மகளிர் அணி நிர்வாகி டாக்டர் தேன்மொழி, ஒன்றிய நிர்வாகி பிரபு, 1வது வார்டு கிளைச் செயலாளர் லோகு, ஒன்றிய இளைஞரணி இந்து பாண்டி, பகுதி இளைஞரணி பாலாஜி தீபக், மற்றும் சந்திரன்,

மணி, அஜித், அசோக், அருண் ராஜ் உட்பட தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள்,1 வது வார்டு நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரியில் திமுக மாணவர் அணி ஆர்ப்பாட்ட முயற்சி: 300க்கும் மேற்பட்டோர் கைது - முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் காவல்துறையினருடன் வாக்குவாதம்

கிருஷ்ணகிரி, ஜூன்.30-

தமிழகத்தில் போதைப்பொருள் விவகாரத்தில் சர்ச்சையில் சிக்கியுள்ளதாக கூறப்படும் அமைச்சர் சரத்குமாரை கைது செய்ய வலியுறுத்தி, கிருஷ்ணகிரியில் திமுக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களான ஜெயேந்திரன், கண்ணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி டான்சி அருகே போராட்டத்திற்காக திரண்டிருந்தவர்களிடம், உரிய அனுமதி பெறாமல் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக காவல்துறையினர் தெரிவித்தனர். தொடர்ந்து, சட்டம்ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கையாக 300க்கும் மேற்பட்ட திமுகவினரை காவல்துறையினர் கைது செய்து காவல்துறை வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.அப்போது, "எந்த அடிப்படையில் கைது செய்கிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பி, முன்னாள் எம்.எல்.ஏ.க்களான பிரகாஷ், செங்குட்டுவன், முருகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் காவல்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு, சங்கர் தர்மன், நகர செயலாளர் அஸ்லம், வேலுமணி, மாவட்ட இளைஞர் அணி அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், காவேரிபட்டகணம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரும் தனியார் மண்டபங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த சம்பவம் கிருஷ்ணகிரியில் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## இடையம்பட்டி பகுதியில் ஊர் பஞ்சாயத்து கூட்டம் : ஊர் கவுண்டருக்கு மரியாதை

திருப்பத்தூர், ஜூன்.30-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை இடையம்பட்டி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோயில் வளாகத்தில் 29/06/2026 அன்று காலை 10 மணியளவில் ஊர் பஞ் சாயத்து இ.எஸ்.தேவராஜ் தலைமையில் ஜெயச்சந்திரன் பத்மநாபன் சாந்தி ராஜேந்திரன் கவுன்சிலர் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் ஊர் பஞ்சாயத்து கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதுமேலும் பொதுமக்கள் முன்னிலையில் ஊர் கவுண்டராக போட்டியிட பிரேம் ஆனந்த் விருப்பம் தெரிவித்ததால் போட்டி



யின்றி ஒருமனதாக பிரேம் ஆனந்த் அவர்களை ஊர் கவுண்டராக தேர்ந் தெடுக் கப்பட்டனர். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊர் கவுண்டர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு பொறுப்பு வகிப்பார்.

மேலும் ஊர் பஞ் சாயத்திற்கு கோயில் பொருளாளர் பழனி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தும் கலந்து கொள்ளவில்லை! என பொதுமக்களுக்கு தெரி வித்தனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர் கவுண்டருக்கு ஊர் முக்கியஸ்தர்கள் சால்வை அணிவித்து அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் பூஜைகள் நடைபெற்று. பின்னர் ஊர்வலமாக மேளதாளங்களுடன் ஊர் கவுண்டருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்பகுதி உள்ள பொதுமக்கள் ஊர் கவுண்டருக்கு ஆரத்தி எடுத்து வாழ்த்துக்களை தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர்

சென்னை, ஜூன்.30-

கரூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கரூர் தொகுதி அதிமுக எம்எல்ஏவாக உள்ள முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சந்தித்து எம்.ஆர்.விஜயபாஸ்கர் தனது ராஜினாமா கடிதத்தை அளித்தார். அவரின் ராஜினாமா கடிதத்தை ஏற்பதாக சபாநாயகர் உடனடியாக அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய 25 எம்எல்ஏக்களில் எம்.ஆர்.விஜயபாஸ்கரும் ஒருவர். அப்போது இவர்களின் கட்சிப் பொறுப்புகளை பழனிசாமி பறித்தார். மீண்டும் அவர்கள் பழனிசாமியுடன் சமாதானம் ஆன பின்னரும், கட்சிப் பதவி வழங்கப்படவில்லை.

சில நாட்களுக்கு முன்பு எம்.ஆர்.விஜயபாஸ்கரை அதிமுகவின் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக நியமித்தார் பழனிசாமி. ஆனாலும், கரூர் மாவட்டச் செயலாளர் பதவி எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக கடும் அதிருப்தியில் இருந்த அவர், இன்று தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஏற்கெனவே மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி.விஜயபாஸ்கர் ஆகிய 5 அதிமுக எம்எல்ஏக்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். இப்போது 6வது எம்எல்வாக எம்.ஆர்.விஜயபாஸ்கரும் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம்,காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து முகாமை,கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பி.முகுந்தன் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணிகளை பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இந்நிகழ்வில் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.விஜய்குமார், நகர செயலாளர் ஜெ.தமிழ்குமரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## டெல்லி பாஜக அரசு அறிவித்துள்ள மின்சார கொள்கைக்கு ஏற்ப மானியம் வழங்கப்படும்: அரசு அறிவிப்பு

டெல்லி, ஜூன்.30-

மூன்று சக்கர மின்சார வாகனம் வாங்க ரூ. 50,000 மானியம் வழங்கப்படும் என்று டெல்லி பாஜக அரசு அறி வித்துள்ளது. டெல்லி பாஜக அரசு அறிவித்துள்ள மின்சார கொள்கைக்கு ஏற்ப மானியம் வழங்கப்படும். டெல்லியில் மின்சார இருசக்கர வாகனங்கள் வாங்குவதற்கு ரூ. 30,000 மானியம் வழங்கப்படும். இபைக் வாங்குவோருக்கு முதல் ஆண்டில் ரூ. 30,000, 2ம் ஆண்டில் ரூ .20,000, 3ம் ஆண்டில் ரூ.10,000 மானியம் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது



## செங்குன்றத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

மாதவரம், ஜூன்.30-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 8வது வார்டு தர்கா அருகே தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சியின் திமுக தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பிரியாராஜ் ஆகியோர் ஆலோசனைபடி இளம்பிள்ளைவாதம் என்னும் போலியோ இல்லா உலகத்தை உருவாக்க வேண்டி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் மருத்துவர் தீபிகா தலைமையில் செவிலியர் சந்தனமேரி முன்னிலையில் சிறப்பு அழைப்பாளர்களாக சமூக சேவகர் அன்பு கலந்துகொண்டு பிறந்த குழந்தை முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை விட்டு முகாமை துவக்கி வைத்தனர்.இதில் சமூக ஆர்வலர் பாலாஜி உடனிருந்தனர்.

## திருப்பத்தூரில் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்க வலியுறுத்தி திமுக மாணவர் அணி ஆர்ப்பாட்டம்: போலீஸ் அனுமதி மறுப்பு போராட்டத்தில் ஈடுபட முயன்றோர் கைது

திருப்பத்தூர். ஜூன்.30-

திருப்பத்தூர் சிவராஜ் லாட்ஜ் எதிரில் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்க வலியுறுத்தி திமுக மாணவர் அணி சார்பில் 29/06/2026 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் கடந்த சில நாட்களுக்கு முன்பு அமைச்சர் சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.




இது தொடர்பாக அமைச்சர் விளக்கமளித்து வீடியோ ஒன்றை வெளி யிட்டிருந்தாலும், அந்த விளக்கமும் பல்வேறு தரப்பினரிடையே விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்த நிலையில், அமைச்சர் சரத்குமாரை அமைச்சரவை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி திமுக மாணவர் அணி இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை அறிவித்திருந்தது. ஆனால், சட்டம் மற்றும் ஒழுங்கு காரணங்களை சுட்டிக்காட்டி காவல்துறை அனுமதி வழங்க மறுத்தது. அனுமதியை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற திமுக மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன் மாவட்ட செயலாளர் தேவராஜ் நகர செயலாளர் ராஜேந்திரன் மாவட்ட இளைஞரணி செயலாளர் வடிவேலு மற்றும் ஏராளமான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# திருப்பூர் மாவட்டத்தில் அமைச்சர்கள் மக்களுக்கு. நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்



திருப்பூர், ஜூன்.30-

திருப்பூர். மாவட்டம் மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.ரி.நி.அருண்ராஜ் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.மனிஷ் நாரணவரே, தலைமையில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர்கள் ராம்குமார் முன்னிலையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 264 பயனாளிகளுக்கு ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னை திருப்பூர் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கடந்து வாரம் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு பல்வேறு ஆலோசனைகள் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இனி வரும் நாட்களில் இது போன்று நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் தேவையான நலத்திட்ட உதவிகள் மற்றும் வசதிகளை செய்து தர அரசு தயாராக உள்ளது. பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை துறை சார்ந்த அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும். நேர்மையான வெளிப்படையான மக்கள் நலம் சார்ந்த அரசு செயல்பட்டு வருகிறது. இவ்வாறு மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.ரி.நி.அருண்ராஜ் தெரிவித்தார்கள். தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.3.05 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், 08 பயனாளிகளுக்கு ரூ.9.15 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரி வீல் சேர்களையும் 16 பயனாளிகளுக்கு ரூ.2.31 இலட்சம் மதிப்பீட்டில் செல்பேசிகளையும், 02 பயனாளிகளுக்கு ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டில் மோட்டாரில் இயங்கும் ஜாய்ஸ்டிக் வீல் சேர்களையும், 02 பயனாளிகளுக்கு ரூ.41,326/ மதிப்பீட்டில் மோட்டாரில் இயங்கும் ஊன்றுகோல்களையும் 1 பயனாளிக்கு ரூ.10,440/ மதிப்பீட்டில் தயார்க்கப்பட்ட டிஎல்எம் பெட்டியையும், 1 பயனாளிக்கு ரூ.24,185/ மதிப்பீட்டில் மோட்டார் பொருத்தப்பட்ட ஊன்றுகோலையும், 1 பயனாளிக்கு ரூ.3,285/ மதிப்பீட்டில் காதொலி கருவியையும், மாவட்ட தொழில்மையம் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.17,35 .இலட்சம் மதிப்பீட்டில் புதிய.தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடன் உதவியையும், 02 பயனாளிகளுக்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் அன்னல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்ட கடனுதவியையும், 02 பயனாளிகளுக்கு ரூ4.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் அதிகாரமளிப்பு கடனுதவியையும், வருவாய் துறையின் சார்பில் அவினாசி வட்டத்திற்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் வடக்கு வட்டத்திற்குட்பட்ட 21 பயனாளிகளுக்கு ரூ.90.61 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் தெற்கு வட்டத்திற்குட்பட்ட 12 பயனாளிகளுக்கு ரூ.45.44 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊத்துக்குளி வட்டத்திற்குட்பட்ட 21 பயனாளிகளுக்கு ரூ.3.59 இலட்சம் மதிப்பீட்டிலும், மடத்துக்குளம் வட்டத்திற்குட்பட்ட 62 பயனாளிகளுக்கு ரூ.23.83 இலட்சம் மதிப்பீட்டிலும் இலவச வீட்டுமனைப்பட்ட மற்றும் இபட்டாக்களையும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் எண்ணெய் வித்துக்கள் அறுவடைக்கு பிந்தைய உடகட்டமைப்பு நிறுவுதல் 1 பயனாளிக்கு ரூ.8.40 .இலட்சம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத்துறை சார்பில் துளிநீர் அதிக பயிர்கடன் 1 பயனாளிக்கு ரூ.31.684/ மதிப்பீட்டிலும், மகளிர் திட்டம் சார்பில் சமுதாய அமைப்புகள் ஸ்ரீ மணிமேகலை விருதுகள் 5 பயனாளிகளுக்கு ரூ.3.00 .இலட்சம் மதிப்பீட்டிலும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து பெட்டகம் ரூ.20,000/ மதிப்பீட்டிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிக்கு உலா மக்கள் மற்றும் பணியாளர்கள் இரு சக்கர வாகன மானியம் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.2.40 .இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவி கடனுதவி என மொத்தம் 264 பயனாளிகளுக்கு ரூ.2,97,72,459/ மதிப்பீட்டில் மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.ரி.நி.அருண்ராஜ் மற்றும் மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி ஆகியோர் வழங்கினார்கள்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர்.எம்.பி.அமித் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) க.சங்கமித்திரை, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) .ஈஸ்வரன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் .சிவபிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை மானாமதுரை நிலைய அலுவலர் போக்குவரத்து ஆ. ரமேஷ் அவர்கள் மற்றும் தீயணைப்புத்துறை வீரர்களால் மானாமதுரைஎம் ஏ கே பெண்கள் கல்லூரியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் முன்பு தீ விழிப்புணர்வு போலி ஒத்திகை செய்து காண்பிக்கப்பட்டது



■ நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான போலியோ சொட்டுமருந்து வழங்கும் முகாமில் நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளரும் குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜூ கலந்துகொண்டுகுழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி முகாமினை துவக்கி வைத்தார்.

## திருப்பூர் மாவட்டம் சுய வேலைவாய்ப்பு. கடன் திட்டங்கள் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது

திருப்பூர், ஜூன்.30-

தமிழகத்தின் அனைத்து கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அரசு மானியத்துடன் கூடிய சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசின் அறிவுரைப்படி சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் கடன் திட்டங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானிய திட்டங்களை தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் திருப்பூர் மாவட்ட தொழில் மையம் மூலம் விழிப்புணர்வு கருத்தரங்கம் கீழ்காணும் தேதிகளில் நடைபெறவுள்ளது. வ.எண் நாள் நேரம் (முதல் வரை) இடம்1 3006202610.30 மு.ப 12.30 பி.ப கூட்ட அரங்கம், மூலனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்2 3006 202602.30 பி.ப 04.30 பி.ப கூட்ட அரங்கம், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்

இக்கருத்தரங்கில் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் கடன் திட்டங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியம் திட்டங்கள், உத்யாம் பதிவு செய்தல், ZED பதிவு செய்தல் மற்றும் நிமீவி பதிவு செய்தல், ஒற்றை சாளர இடர்நீக்க குழு (Ease of Doing Business) மற்றும் BRAP (Business Reforms Action Plan) தொடர்பான தகவல்கள் அளிக்கப்படவுள்ளது. தொழில் துவங்க ஆர்வமுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களின் கீழ் பயன் பெற மாவட்ட தொழில் மையத்தால் நடத்தப்படவுள்ள வட்டார அளவிலான இந்த விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு திட்டங்கள் குறித்த தகவல்கள் அறிந்து பயன் பெறலாம். மேலும், தகவலுக்கு 8925534022, 8925534025 மற்றும் 8925534024 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி புதிய தொழில்கள் துவங்கி பொருளாதார ஏற்றம் பெறுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்கள்..



## திருச்சியில் ஜூலை 19ல் இரத்ததானம், உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி

திருச்சி, ஜூன்.30-

திருச்சி மாவட்டம் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் நிறுவனத் தலைவர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில், ஜூலை 19 ஆம் தேதி இரத்ததானம், கண்தானம் மற்றும் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை நடத்த ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பொதுச் செயலாளர் ஆதிலட்சுமி ஆனந்தராஜ், மாநில பொருளாளர் பானுமதி, மாநில துணை ஆலோசகர் தமிழழகன், மாநில மகளிரணி தலைவர் காந்திமதி, மாநில மகளிரணி துணை ஆலோசகர் ஈஸ்வரி, மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான், மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ராஜ் குமார், மாநில மகளிரணி ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மேலும் திருச்சி மாவட்ட நிர்வாகிகள் பாலா, கிருஷ்ணவேணி, மாரியம்மாள், சரவணன், ரேவதி, யாஸ்மின் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ரஃபியா பேகம், டெனிட்டா மேரி, பரிதாபேகம், இன்ப மலர் ஆகியோரும் பங்கேற்றனர்.



■ முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்டம் பந்தலூர் மத்திய ஒன்றிய கழகம் சார்பில், ஒன்றிய கழக பொறுப்பாளர் மாங்கோடு ராஜா தலைமையில், கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி முன்னிலையில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடைப்பெற்றது.இதில் தலைமை கழக பேச்சாளர் கூடலூர் மு.பாண்டியராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

## கேரளத்தில் படகு தலைகீழாக கவிழ்ந்து மீனவர்கள் மூழ்கினர்!!

கேரளம், ஜூன்.30-

மலப்புரம் மாவட்டம் பரப்பனங்காடியில் கடலில் மீன்பிடித்த போது படகு தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. பலத்த காற்றால் படகு மூழ்கி கடலில் தத்தளித்த 6 மீனவர்களை சக மீனவர்கள் போராடி மீட்டனர்

## அரசு மருத்துவமனைகளில் அனுமதியின்றி வீடியோ, ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவேற்றினால் நடவடிக்கை

சென்னை, 30-

அரசு மருத்துவமனைகளில் அனுமதியின்றி ரீல்ஸ் மற்றும் வீடியோக்கள் எடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் தனியுரிமையைப் பாதிக்கும் வகையில் எடுக்கப்பட்ட வீடியோக்களை உடனடியாக நீக்க வேண்டும் என தமிழக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

Geographic Reference

மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதியின்றி ரீல்ஸ், வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வது சட்டப்படி குற்றம் என்று சுகாதாரத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக சமீப நாட்களாக அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் மருத்துவ சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை ஆய்வு என்ற பெயரில் குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் வீடியோகள் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர். நோயாளிகளின் தனியுரிமையைப் பாதிக்கும் வகையில் இருப்பதால் அத்தகைய செயலில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

இவ்விதிமுறைகளை மீறிச் சிகிச்சைகளை வீடியோ எடுப்போர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது. மருத்துவர்கள், செவிலியர்களின் சிகிச்சையை அனுமதியின்றி வீடியோ எடுப்பது சட்டப்படி குற்றம் என்று தமிழக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

நேற்று விருதுநகரில் தவெக நிர்வாகி போலியோ சொட்டு மருந்து செலுத்தி ஆய்வு செய்வது போன்று வீடியோ வைரலான நிலையில் தமிழக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. தொடர்ந்து இது போன்ற செயல்கள் அதிகரித்து வருவதால் சுகாதாரத்துறை இத்தகைய முன்னெடுப்பை எடுத்துள்ளது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161